
## தலைநகரில் ஏற்படும் வெள்ளம்

# 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும்

### அமைச்சர் டாக்டர் ஸலிஹா தகவல்



கோலாலம்பூர், அக். 17- தலைநகரில் ஏற்படும் திடீர் வெள்ளத்தைக் கண்காணிப்பதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் 24 மணி நேரமும் இயங்கும் நடவடிக்கையை அறையைத் திறந்துள்ளதாகப் பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் எங்கு மோசமான அளவில் வெள்ளம் ஏற்படுகிறது என்பதை அதன் உறுப்பினர்கள் ரகசியக் கேமராக்கள் வழி கண்காணித்து வருவர் எனவும் அவர் தெரிவித்தார்.

தலைநகரைச் சுற்றி 24 இடங்கள் அடிக்கடி வெள்ளம் ஏற்படும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், இதில் ஜாலான் புடு, ஜாலான் சுல்தான், டத்தோ ஒன் சுற்றுச்சாலை, ஜாலான் பீல், ஜாலான் மகாராஜா லேலா, ஜாலான் கெந்திங் கிளாங் ஆகியவை அடங்கும் என்றார்.

ஒருவேளை மேற்குறிப் பிட்ட பகுதிகளில் திடீர் வெள் ளம் ஏற்பட்டால் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் உடனடி நடவடிக்கை யில் இறங்குவார்கள் என நேற்று மலாயாப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட வெள் ளத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் அவர் செய்தியாளர் களிடம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி அளவில் வழக்கத்திற்கு மாறாக மணிக்கு 118 மில்லி மீட்டர் அளவில் கனத்த மழை பெய்த காரணத்தாலே தலைநகரைச் சுற்றியுள்ள 24 இடங்களில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதாக அமைச்சர் கூறினார்.

எனினும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் தண்ணீரை இழுக்கும் 5 இயந்திரங்களின் மூலம் திடீர் வெள்ளம் ஏற்பட்ட இடங்களில் தண்ணீரை வெளியேற்றும் பணியில் இறங்கியதன் இதனால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வுகாண முடிந்தது என்றார் அவர்.

மலாயாப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் குறித்து விவரித்த அவர், இதில் மாணவர்கள் யாரும் பாதிக்கப் படவில்லை. இப்பல் கலைக்கழகத்தில் வெள்ளம் தொடர் பான எச்ச ரிக்கை மணி வைக்கப்பட் டுள்ளதால் மாணவர்கள் இவ்வெள்ளத் தில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டுள்ளதாகவும் கூறினார்.



இந்தத் திடீர் வெள்ளத்தால் அப்பல்கலைக்கழகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 6 வாகனங்கள் சேதமுற்றதாக அவர் கூறினார்.

அதேவேளையில் மலாயாப் பல்கலைக்கழகப் பகுதியில் உள்ள நீர்த்தேக்கத்தில் 16 ஆயிரம் சதுர மீட்டர் தண்ணீர் அளவு கொள்ளும் என்பதால் அதனை முறையாகப் பராமரிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.